REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: தை 9உ செவ்வாய் (22—1—57) ★ ★ வெளியீடு : தை 10உ புதன் (23—1—57) [இதழ் 193

'குடியரசு தினம்' கொண்டாடமாட்டோம்!

மலாயா இந்தியர் காங்கிரஸ், இந்த ஆண்டு இந்தியக் குடியரசு தின விழாவினைக் கொண்டாடாது என்றும், 'இந்த நாட்டில் உள்ள ஒரு அரசியல் கட்சி என்ற முறையில், நாங்கள் இந்திய விடுமுறை நாட்களைக் கொண்டாட விரும்பவில்லை' என்றும் கட்சிப் பிரமுகர் ஒருவர் கூறியிருப்பதாகவும் தெரியவருகிறது.

'நமது உரிமைகளுக்காகவும் சலுகைகளுக்காகவும் நாம் இங்கே குரல் எழுப்புவதானால், நாம் இங்கு இந்நாட்டுக் குடிமக்களாகி விட வேண்டும்—மலாயர்களுடன் மலாயர்களாக வாழ வேண்டும்' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

'கட்சி, குடியரசு தினத்தைக் கொண்டாடாது; ஆனால், வேறு சிலர் ஏற்பாடுசெய்யக்கூடிய விழாவில் கட்சி உறுப்பினர்கள் கலந்துகொள்வதைக் கட்சி தடுக்காது' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சென்னையின் திட்டம் மேலும் வெட்டப்படுமாம்

டெல்லி எஜமானர்களிடம் காமராசர்கள் கெஞ்சப் போகிறார்களாம்

சென்னை, ஜன. 21

'கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல'—என்று பழமொழி உண்டு! சென்னையின் ஐந்தாண்டுத் திட்டம் அந்தக் கதையாகத்தான் இருக்கிறது!

கேட்டது 400 கோடி; கிடைத்தது 173 கோடி—என்றிருந்த நிலை இப்போது மாறி, சென்னையின் திட்டம் மேலும் இருபது கோடி அளவுக்கு வெட்டப்படுகிறது. இப்போது ரூ. 152·32 கோடிதான் சென்னையின் திட்டச் செலவாயிருக்குமாம்.

இந்த 'வெட்டு'க்குக் காரணம், மலபார் மாவட்டம் கேரளத்துடனும், கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்துடனும் இணைந்ததுதானாம்!

சென்னையின் திட்டத்தை இப்படிச் சுருக்கிக் கொள்ளுவதற்கு சென்னை சர்க்காரே சம்மதம் தெரிவித்துவிட்டார்களாம்! அத்துடன் தாங்கள் கேரள மாநிலத்திற்காகத் திட்டத்தின் அளவைக் குறைத்துக் கொண்டிருப்பதினால், டெல்லி சர்க்காரிடம் சென்று, மாநிலத்தின் திட்டத்தைப் பெரிதாக்கித் தர வேண்டுமெனக் கேட்கப்போகிறார்களாம்—தங்கள் எசமானர்களிடம் கெஞ்சப் போகிறார்களாம்!

********-*******-***

25—1—57-ல்!

தி. மு. கழக அபேட்சகர்கள் 2-ம் பட்டியல்

சென்னை 25—1—57 (வெளியீடு 26—1—57) 'நம் நாடு' இதழில் வெளிவருகிறது

—தலைமைக் கழகம் (தி. மு. க)

பதவியையும் துறந்து காங்கிரசையும் கைகழுவுகிறார் ஒரு மந்திரி!

பீகார் காங்கிரசில் பிளவு அதிகரிக்கிறது

பாட்னா, சன. 21—

பீகார் மாநில நீர்ப்பாசன இலாகா மந்திரியான ராம் சரித்தர் சிங் என்ற மந்திரி, தனது பதவியையும் துறந்துள்ளதல்லாமல், 'காங்கிரசுக்கும் எனக்கும் இனி ஜென்மப்பிராப்திகூடக் கிடையாது' என்றும் கூறிக் கைகழுவிவிட்டாராம்!

தனது இராஜினாமாவை, தான் கடந்த 5-ந் தேதியன்றே முதன் மந்திரியிடம் தந்துவிட்டதாகவும், இன்னும் அவரிடமிருந்து பதில் ஏதும் வரவில்லை என்றும், தனது இராஜினாமா அங்கீகரிக்கப்படும் வரை, தான், தனது இராஜினாமாவுக்கான காரணங்களைக் கூறப் போவதில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நாகைக்கு இதுதான்!

சென்னை, சன. 21—

பாதி உலர்ந்த இறால், கருவாடு உற்பத்தி நிலையம் ஒன்றை நாகப்பட்டினத்தில் ஆரம்பிக்க சென்னை அரசாங்கம் அனுமதியளித்துள்ளதாம்.

'வறுமைச் சாக்கடையில் உழலும் ஏழைகளுக்காகத் தொடர்ந்து பாடுபடுங்கள்'

என். வி. நடராசனிடம் உண்ணாநோன்பிருக்கும் சங்கு-கணேசன் உருக்கமான வேண்டுகோள்

சென்னை; ஜன. 22—

"வறுமைச் சாக்கடையில் உழலும் ஏழைகளுக்காகப் பாடுபடுங்கள்; அவர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டுங்கள்—கைதூக்கிவிடுங்கள்; அவர்களது அச்சத்தைப் போக்குங்கள்; இதுவே எனது வேண்டுகோள்"

என்று, சென்னையில் கடந்த ஆறு நாட்களாக உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் திரு. சங்கு-கணேசன் அவர்கள், தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களிடம் உருக்கமாகக் கூறினார்.

சந்திப்பு

உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் காந்தியவாதி சங்கு—கணேசன் அவர்களை நேற்று மாலை 6-30 மணியளவில், தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், தோழர் முனை - ஆர். எஸ். பாண்டியன் அவர்களுடன் சென்று சந்தித்தார்.

"சங்கரலிங்க நாடார் சாவுக்குப் பின்னும் திருந்தாத இந்த ஆட்சியாளர்கள், மமதை கொண்டவர்களாயிற்றே! இவர்களுக்காக, நீங்கள் ஏன் இப்படி உயிரைப் போக்கிக்கொள்ள வேண்டும்?"

என்று, திரு நடராசன் அவர்கள் கேட்டார்.

சற்று களைப்புற்றிருந்த நிலையிலும் சங்கு - கணேசன் அவர்கள் கூறியதாவது :—

"என்ன செய்வது? என் போன்றவர்கள், காந்தியத்தில் நம்பிக்கை கொண்டவர்கள்; ஆட்சியாளர்களைத் திருத்துவதற்கு, வேறு வழி காணமுடியாதவர்களாயிருக்கின்றனர். இத்தனை ஆண்டுக் காலமாகக் காங்கிரசிலிருந்து வரும் என்போன்றவர்களுக்கு ஆட்சியாளர் அலட்சியம் காட்டுகின்றனர் என்றால், இவர்கள், சாதாரண ஏழை எளிய மக்களை எப்படி மதிக்கப் போகிறார்கள்? எங்கள் காலத்தில் நாங்களே, 'வெள்ளைக்காரன் ஆட்சியே பரவாயில்லை' என்று கூறுகிற வெட்கப்படவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது கண்டு மனம் பொறுக்கவில்லையே! நேரில் சந்தித்துக் கேட்டாலும் பதில் தருவதில்லை. கடிதம் எழுதினாலும் பதில் எழுதுவதில்லை என்றால், எங்களைப் போன்றவர்களின் மனம் குமுறாதா?

"பொது வாழ்க்கை பெரிதல்லவா? ஆறல் அபிப்பிராய பேதங்கள் இருந்தாலும், ஒருவருக்கொருவர் காட்ட வேண்டிய சாதாரண மரியாதையைக்கூட, சொந்தக் கட்சியினர் என்று சொல்லிக்கொள்ளும் இந்தக் காங்கிரஸ் ஆட்சியாளர் காட்டுவதில்லை; அவ்வளவு ஆணவம் கொண்டவர்களாயிருக்கின்றனர்.

"காங்கிரஸ் தலைவர் தேபருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்

(4-ம் பக்கம் பார்க்க)

என். ஜி. ஓ. சங்கத் தலைவர்கள் ராஜிநாமா?

வேலை நிறுத்தத்தை ஒத்திப்போட்டதின் எதிரொலி

சென்னை, ஜன 21—

சென்னை சர்க்கார் ஊழியர் சங்கத் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகிய மூவரும் தங்கள் பதவிகளிலிருந்து இராஜிநாமாச் செய்துவிட்டார்களாம்.

காரணம், தாங்கள் கூடி, ஒரு மணி நேர அடையாள வேலை நிறுத்தத்தை ஒத்திப் போடுவதென முடிவு செய்தது, ஊழியர்களில் பலருக்குப் பிடிக்கவில்லை—அதிருப்தியைத் தந்துள்ளது என்றும், தங்கள் விருப்பத்திற்கு மாறாக மதுரை (என். ஜி. ஓ) மாநாட்டிற்கு பல அரசியல் கட்சிப் பிரதிநிதிகளையும் அழைப்பது என்று வரவேற்புக் குழுவினர் முடிவு செய்திருக்கிறார்கள் என்றும் அவர்கள் கூறியிருக்கின்றனர்.

ஆட்சியாளரின் இன வேற்றுமைக்கு எதிர்ப்பு

மாணவர்கள் படை ஊர்வலம்

ஜோகனஸ்பர்க், சன. 21—

விட்வாட்டர், ஸ்டாரண்டு ஆகிய பல்கலைக் கழகங்களில் மொத்தம் 4,500 மாணவர்கள் உள்ளனர்; அதில் 215 பேர் வெள்ளையரல்லாதவர்களாவர்; எல்லா மாணவர்களும், பல்கலைக் கழகத்தின் இன வேற்றுமைக் கொள்கையைக் கண்டித்து மௌன ஊர்வலம் நடத்தியுள்ளனர்.

கேப்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 60 வெள்ளை மாணவர்கள் பாராளுமன்றத்திற்கு வெளியே சென்று இனவேற்றுமைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இனவெறிக் கொள்கை

தென்னாப்பிரிக்க சர்க்காருக்கு ஐ. நா. கோரிக்கை

நியூயார்க், சன. 21—

இனவேற்றுமைக் கொள்கைகளைக் கைவிடும்படி தென்னாப்பிரிக்க சர்க்காருக்கு ஐ. நா. விசேஷ அரசியல் குழு கோரியிருக்கிறது.

ஐ. நா. சாசனத்தின்படி நடப்பதற்கு தெ. ஆ. சர்க்கார் தவறியிருப்பதையும் குழு கண்டித்திருக்கிறது.

கடமைகளைக் கடைப்பிடித்துச் செல்லாமல், எதிர்காலத்தில் சிக்கலான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் ரீதியில் ஓரவஞ்சகமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருப்பதையும் அக்குழு கண்டித்திருக்கிறது.

மீண்டும் தனது பிரதிநிதியை ஐ. நா.-வுக்கு அனுப்பிவைக்குமாறு குழு கேட்டுக்கொண்டிருக்கிறது.

இதுபற்றியெல்லாம் தென்னாப்பிரிக்க சர்க்காருடன் உசிதமான வகையில் பேச்சுவார்த்தை நடத்துமபடி ஐ. நா. செயலாளர் கோரப்பட்டிருக்கிறார்.

சென்னைக்கு நீர்ப்பாசன வசதி

டில்லி சர்க்கார் தீவிரமாக சிந்திக்கிறார்களாம்!

சென்னை, சன. 21—

"இந்தியாவில் உள்ள நதிகள் அனைத்தையும் இந்தியா முழுவதற்கும் சொந்தமானது என்று கருதுகிறோமே தவிர, எந்த ஒரு நதியும் எந்த ஒரு மாநிலத்திற்கு மட்டுமே பிரத்தியேகமானதல்ல என்றே நாங்கள் கருதுகிறோம். சென்னைக்கு ஆற்று நீர்ப்பாசன வசதிசெய்து தருவதைப்பற்றி நாங்கள் தீவிரமாகச் சிந்தித்துவருகிறோம்"

என்று மத்திய நீர், மற்றும் மின்சார கமிஷன் தலைவர் கன்வார் ஜெயின் எனபார் இங்கு கூறியிருக்கிறார்.

சென்னை மாநில நீர்ப்பாசன இலாகா எஞ்சினியர், அவரிடம், சென்னையில நீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதையும், அண்டை மாநிலங்களில் உள்ள ஆற்று நீர் கடலில் விழுந்து வீணாவதைத் தடுத்து இந்த மாநிலத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ள வசதிசெய்து தரவேண்டும் என்று முறையிட்டுக் கொண்டபோதுதான், அவர் மேற்கண்டவாறு கூறினாராம்!

'வாக்காளர்களிடம் மரியாதையாக நடந்துகொள்க'

பிரதமதேர்தல் அதிகாரி சுற்றறிக்கை

பொதுத் தேர்தலின்போது தேர்தல் அதிகாரிகள் வாக்காளர்களிடம் மிக மரியாதையுடனும் உதவியாளர்களாகவும் நடந்துகொளவதுடன், முறையற்ற வழிகளில யார் நடந்துகொண்டாலும் அவர்கள்மீது கண்டிப்பான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமெனறும் பிரதம தேர்தல் அதிகாரி சுகுமார்சென் விடுத்துள்ள சுற்றறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

வாஷிங்டன், சன 20—

சோவியத் ரஷ்யா மீண்டும் அணுசக்தி ஆயுதமொன்றை வெடித்துப் பரிசோதனை செய்திருப்பதாக அமெரிக்க அணுசக்திக் குழுத் தலைவர் கூறியுள்ளார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 22—1—'57 செவ்வாய்

சாதிக் கேடுகள் ஒழிய!

சாதி முறையின் ஆதிக்கம் இன்றைய இந்தியாவில் எத்தகு 'ஆதிக்கம்' பெற்றிருக்கின்றது என்பதை கல்கத்தா இந்திய விஞ்ஞானக் காங்கிரஸ் கூட்டத்தில் ஆராய்ந்திருக்கிறார்கள்.

அங்கு பேராசிரியர் எம். என். சீனிவாசன் அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள், எதிர்கால சமுதாய அமைப்பைப்பற்றிக் கவலைப்படுவோர் அனைவரது கவனத்திற்கும் ஆழ்ந்த சிந்தனைக்கும் உரியனவாகும்.

சாதிக்கேடுகள், இன்றைய சமுதாய அமைப்பில் உள்ள மிக முக்கியமான கோளாறுகளுக்குக் காரணமானவையாகும்; இந்தச் சமுதாய முன்னேற்றத்திற்குப் பெரும் தடைக்கல்லாயிருப்பவையாகும். இந்தச் சாதிக்கேடுகள் ஒழிக்கப்பட வேண்டுமென்பதில், முதல்தரமான பிற்போக்குவாதிகளான காங்கிரசாருக்குக்கூட கருத்து வேற்றுமை இல்லை என்றுதான், அந்தக் கட்சிப் பெரியவர்கள் கூறுகின்றனர். ஆனால் அவர்களது சாதி ஒழிப்பு, உள்ளபூர்வமானதல்ல — விசுவாசமானதல்ல என்பதை, அவர்களது நடைமுறைகள் சொல்லும். காங்கிரஸ் தலைவர்கள்—அதிலும் குறிப்பாகப் பண்டித நேரு, சாதிக் கேடுகளைச் சாடுவதென்பது, பேசுவதற்கு வேறு விவகாரங்கள் கிடைக்காதபோது—அல்லது பேசிக்கொண்டிருக்கும் விவகாரங்களில் சலிப்பு ஏற்படும்போது பேசப்படுகிற ஒரு விஷயமே தவிர, சமுதாய முன்னேற்றத்திற்கு அடிப்படையானதோர் பிரச்சினை அல்ல—அவர்களைப் பொறுத்து!

சாதிக் கேடுகளின் உச்சமான கட்டம்தான், சமுதாயத்தில் சிலர் தீண்டப்படாதவர்களாக — தாழ்த்தப்பட்டவர்களாக ஆக்கப்பட்ட கொடுமை. இந்தத் தீண்டாக் கொடுமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்குக்கூட ஆட்சியாளர்கள் —காங்கிரஸ் ஆட்சியாளர்கள் தேவையான அளவு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம், சரியான திசையிலும் மேற்கொள்ளப்படவில்லை.

சாதிகள், அவற்றினால் புதிது புதிதாகத் தோன்றிக்கொண்டிருக்கும் கொடுமைகள் எல்லாம் ஒழிய, சாதிகளின் தோற்றுவாய் தூர்க்கப்பட வேண்டும்.

சாதி முறையும் அவை தரும் கேடுகளும்?

சாதி முறைக் கேடுகள் ஒழிய வேண்டுமானால், சனாதனம் ஒழிக்கப்பட வேண்டாமா?

சில அதிதீவிர முற்போக்குவாதிகள், சாதிகள் இருக்கின்றன—பலமான ஆதிக்கம் பெற்றிருக்கின்றன, இந்தச் சமுதாய அமைப்பில், என்ற உண்மையையே பார்க்க மறுக்கிறார்கள். அவர்கள் தங்களை யதார்த்தவாதிகள் என்று வேறு பிரகடனப்படுத்திக் கொள்வதில் வெட்கப்படுவதும் இல்லை.

மக்களில் விழிப்படைந்து வருவோர் நெருக்கும்போது மட்டுமே, சாதிக் கேடுகள் நிலவும் உண்மையை ஒப்புகிறார்கள். ஆனால் அந்தச் சாதிகளின் தோற்றுவாய் சனாதனம் அல்ல என்று வாதிடக் கிளம்புகிறார்கள். சாதிகள் தோன்றியது எப்படி என்பதை, இந்த 'சுயம்பு முற்போக்குவாதிகள்' இந்த நாட்டின் வரலாற்றினைப் படித்துத் தாங்களாகவே சிந்தித்து அறிய மறுப்பவர்கள். இந்த நாட்டு வரலாற்றிற்கு, இவர்களுக்கு ஞானப்பால் ஊட்டும் சில அன்னிய நாட்டு அதிமேதாவிகள் தரும் வர்ண விளக்கம்தான் இவர்களுக்குச் சரியென்றுபடும். ஏன்—வரலாற்றையே இவர்கள் தங்களுக்கு விருப்பமானவகையில் திருப்பிப் படிக்கும்' மகாபுத்திசாலிகளாயிற்றே! இந்த அதிதீவிர முற்போக்குவாதிகள், சாதிக் கேடுகளை ஒழிப்பதற்குத் துரும்பும் அசைக்க விரும்பாதவர்கள் என்பதையும் நாடு நன்கறியும்.

உண்மையிலேயே, சாதிக் கேடுகளைக் களைய விரும்புவோர், சாதி முறைக்கு நியாயம் கற்பிக்கும் தீய சக்திகள்—தத்துவங்கள்—புராண இதிகாசங்கள் முதலியவற்றிற்கெல்லாம் எதிராகத் தீவிரமான போராட்டம் நடத்தத் தயாராயிருக்க வேண்டும். சில அரசியல் மாறுதல்களாலேயே இந்தக் கேடுகளைக் களைந்துவிடலாம் எனக் கூறுபவர்கள், முதல்தரமான பித்தலாட்டக்காரர்களாவர். சாதிமுறைக் கேடுகளைக் களைவதற்கு, மக்களுடைய சிந்தனை வழியில் புரட்சிகரமானதோர் மாற்றம் ஏற்பட்டாக வேண்டும்.

மக்கள் மனமாற்றத்தால் மட்டுமே ஒழிக்கப்படக்கூடிய இதுபோன்ற தீங்கு பயக்கும்

சென்னை நகரில்!

மார்ச் 8-ந் தேதி தேர்தல்கள்

★

சென்னை நகரில், வரும் மார்ச் 8-ந் தேதி வெள்ளியன்று, இரு மக்கள் சபைத் தொகுதிகளிலும் ஒன்பது சட்டசபைத் தொகுதிகளிலும் தேர்தல் நடைபெறும்; ஒரு தனித் தொகுதி உள்ளிட்டு நகரிலிருந்து சட்டசபைக்கு 10 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

நியமனப் பத்திரங்கள் தாக்கல் —சனவரி 19-ந் தேதி முதல் 29-ந் தேதி பகல் 3 மணிக்குள்; நியமனப் பத்திரங்கள் பரிசீலனை—பிப். 2-ந் தேதி காலை 11 மணிக்கு; வாபஸ் பெறுதல்—பிப். 4-ந் தேதி பகல் 3 மணிக்குள்.

நகரசபை கமிஷனர்தான் நகர தேர்தல் அதிகாரி; அவரிடமோ, துணைத் தேர்தல் அதிகாரியான ரெவினியூ அதிகாரியிடமோ அபேட்சகர் பத்திரங்களைத் தாக்கல் செய்யலாம்.

தேர்தல் அதிகாரிகள்

தேர்தலன்று, சுமார் 1,059 வாக்குப் பதிவு நிலையங்களில் 11,700 ஊழியர்கள் பணி புரிவர் என்றும் தெரியவருகிறது.

நிர்வாக அலுவல்களை தெலுங்கிலேயே நடத்த வேண்டுமெனக் கோரிக்கை

விசயவாடா, சன 20—

ஆந்திர மாநில அரசாங்கம் எல்லா நிர்வாக அலுவல்களையும் கூடியமட்டிலும் தெலுங்கிலேயே நடத்தவேண்டும் என்று வற்புறுத்தி ஆந்திர மாநிலக் காங்கிரஸ் குழு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

அடுத்த ஐந்தாண்டில் அணு உற்பத்தி நிலையங்கள்

பம்பாய், சன. 20—

எதிர்காலத்தில் எரி பொருளாகப் பயன்படக்கூடிய மின்சாரம், புரேனியம் போன்றவைகளைத் தயாரிக்கும் அணு உற்பத்தி நிலையங்களை அடுத்த ஐந்தாண்டு காலத்தில் இந்தியாவில் ஏற்படுத்துவது பற்றிய முடிவு இன்னும் சில தினங்களில் தெரியவரும் என்று இந்திய அணுசக்தி குழுத் தலைவர் பாபா தெரிவித்துள்ளார்.

பிணைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவர்கள் உணரச் செய்ய வேண்டும்; அப்படி உணரச் செய்வதற்குத்தான், சர்க்காரின் திட்டங்களும் சட்டங்களும் துணைபுரிய வேண்டும்.

பொதுவாகச் சாதிக் கேடுகள் களையப்பட வேண்டுமென்பதற்காக உண்மையோடு—நல்லெண்ணத்தோடு பாடுபட்டு வந்தவர்கள் — வருபவர்கள்— இனியும் பாடுபடக்கூடியவர்கள் தி. மு. கழகத்தவரே

கைத்தறி நெசவாளருக்குக் குடியிருப்புக் காலனிகள்

468 வீடுகள் கட்டுவதற்கு திட்டம்?

புதுடில்லி, சன. 20—

சுமார் ரூ. 18,65,000 செலவில் கைத்தறி நெசவாளர்களுக்கென நான்கு குடியிருப்புக் காலனிகளை நிர்மாணிக்கும் திட்டங்களை இந்திய சர்க்கார் அங்கீகரித்திருக்கின்றனர்.

இதில் மூன்று காலனிகள் சென்னையிலும், மற்றொன்று மைசூரிலும் நிறுவப்படும்.

சென்னை திட்ட விபரம்

சென்னை சர்க்காரின் மூன்று திட்டங்கள்படி சேலத்தில் 200 வீடுகளும், அருப்புக்கோட்டையில் 200 வீடுகளும், கோவையில் 68 வீடுகளும் கட்டப்படும்.

கோவை, சேலம், சாட்சன் நகர்களில் கட்டப்படும் ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 3,600 செலவாகும் என்றும், அருப்புக்கோட்டையில் கட்டப்படும் ஒவ்வொன்றுக்கும் ரூ. 3,000 செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த திட்டங்களை மேற்கொள்ள சென்னை சர்க்காருக்கு தற்போது ரூ. 3,94,000-த்திற்குமேல் கடன் தருவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

இதுமட்டுமல்லாமல், சென்னை மாநிலத்தில் நிர்மாணிக்கப்பட இருக்கும் மூன்று காலனிகளில் ஒன்றுக்கு, தண்ணீர் விநியோகம் போன்ற வசதிகளுக்காக ரூ. 1,39,350 கடன் தரவும் இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர்.

கூட்டுறவு அடிப்படையில் அமைக்கப்படும் இந்த விடுதிகளை நெசவாளர்கள் தங்களது தொழிற்கூடங்களாகக்கூடப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

இந்தக் காலனிகளில் பொதுப் பட்டறையாக, சாயமேற்றும் இயந்திரம், காலெண்டரிங் இயந்திரம் ஆகியவைகளும் இருக்கும்.

இவைகளை, சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் அமைக்கும்.

நெசவாளர்களுக்குத் தேவைப்படும் நூல் விநியோகம், தயாரிக்கப்பட்ட துணிகளுக்கு மார்க்கெட் வசதி ஆகியவைகளையும் இந்தச் சங்கங்கள் கவனிக்கும்.

நெசவாளர்களின் வாழ்க்கை நிலைமையை அபிவிருத்தி செய்வதற்காகக் கைத்தறி 'செஸ்' நிதியிலிருந்து உதவிதர இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர்.

இந்தக் காலனிகளிலுள்ள ஒரு வீட்டிற்கு அதிகபட்சம் செலவு ரூ. 3,600 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் மூன்றிலொரு பகுதி மானியமாகக் கருதப்படும். மீதியுள்ள பகுதி, 25 ஆண்டுகளில் செலுத்தும் நீண்டகாலக் கடன் அடிப்படையில் இருக்கும்.

மைசூர் மாநிலத்தில்

துணி, சர்க்கரை ஆலைகள் நிர்மாணிக்கப்படுமாம்

பெங்களூர், சன. 20—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மைசூர் மாநிலத்தில் இரண்டு துணி ஆலைகளும், ஐந்து சர்க்கரை ஆலைகளும் நிர்மாணிக்கப்பட இருக்கின்றன.

துணி ஆலை ஒவ்வொன்றிற்கும் மூலதனமாக ரூ. 50 இலட்சம் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்றும், இதில் 10 இலட்சம் ரூபாயை மாநில சர்க்கார் ஏற்றுக்கொள்ளும் என்றும், பொது மக்களிடமிருந்து ரூ 10 இலட்சம் வசூலிக்கப்படும் என்றும், எஞ்சிய 30 இலட்சம் ரூபாயையும் மத்திய தொழில் நிதி கார்ப்பொரேஷன் கொடுக்கும் என்றும், மேற்கண்ட தகவலை தெரிவித்த மைசூர் மாநில கூட்டுறவு மந்திரி அறிவித்திருக்கிறார்.

இதுபோலவே, ஒவ்வொரு சர்க்கரை ஆலையின் உத்தேசிக்கப்

அனுமதிக்கப்பட்ட காகிதத் தொழிற்சாலைகள்

எந்தெந்த மாநிலங்களில் நிறுவப்படும்?

நாட்டில் புதிதாக 22 காகிதத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு மத்திய சர்க்கார் அனுமதியளித்திருப்பதாகவும், இப்போதுள்ள 21 தொழிற்சாலைகள் விரிவுபடுத்தப்படுமென்றும், இவற்றால் நாட்டின் காகிதம், காகித அட்டைகள் உற்பத்தி சக்தி ஆண்டொன்றுக்கு 2,10,000 டன்னிலிருந்து 5,40,000 டன்னாக இரண்டாவது திட்ட இறுதிக்குள் அதிகரித்துவிடுமென்றும் கூறப்படுகிறது. இதற்கு மேலும் உற்பத்தி செய்யக்கூடிய சக்தியை அதிகப்படுத்துவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறதாம்.

இந்தத் தகவல்களை, மத்திய வணிகத் தொழில் அமைச்சர் மனுபாய் ஷா அறிவித்திருக்கிறார்.

அசாமில் ஆண்டொன்றுக்கு 30,000 டன் வீதம் காகிதத்திற்கு வேண்டிய இரசாயன குழம்பை உற்பத்தி செய்கிற ஒரு தொழில் நிறுவனம் அமைக்கவும் சர்க்கார் அங்கீகாரமளித்திருக்கிறார்களாம். இதுதவிர, ரேயன் ரகக் குழம்பைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகளை ஏற்படுத்துவது சம்பந்தமான இரு திட்டங்கள் பரிசீலனையிலுள்ளனவாம்.

கடந்த 1950—51-ல் மொத்தம் 2,09,000 டன் காகிதம் இந்தியாவில் உபயோகிக்கப்பட்டது; 1955—56-ல், அந்த அளவு 3,17,000 டன்னாக அதிகரித்துவிட்டது; அதுபோலவே உள்நாட்டு உற்பத்தியும், 1950—51-ல் 1,14,000 டன்னாக இருந்தது 1955—56-ல் 2,02,000 டன்—அதாவது சுமார் 80 சதவிகிதம் அதிகரித்தது.

ஆண்டுதோறும் வெளிநாடுகளிலிருந்து 49,000 டன் காகிதம், 80,000 டன் பத்திரிகைக் காகிதம், 12,000 டன் ரேயன் ரகக் குழம்பு ஆகியவை இறக்குமதி செய்யப்படுகின்றன; அதன் மதிப்பு ரூ 15 கோடியாம்!

காகிதக் குழம்பு தயாரிக்கும் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்கள், ஆதாரங்களை அபிவிருத்தி செய்வதுபற்றிப் பரிசீலிக்க வனத்துறை இன்ஸ்பெக்டர்

என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. சாதிகள் ஒழிய வேண்டுமானால், நமது கழகம் ஊக்குவிக்கப்பட வேண்டும், மேலும் வளர்க்கப்படவேண்டும். அதற்கு மக்கள் செய்ய வேண்டியதெல்லாம், தேர்தலில் தி. மு. கழக அபேட்சகர்களை ஆதரிப்பதேயாகும்.

ஒப்புக்காகக் கூட்டத்தோடு சேர்ந்து குரல் எழுப்பும் அதிதீவிரவாதிகளின் போலி சாதி ஒழிப்பு வேஷம் கலைக்கப்பட வேண்டும்.

களை நிறைவேற்றி மட்டும் ஒழித்துவிட முடியாது. இந்தச் சாதி முறைகள் மூலம் பயன் பெற்றுவரும் உயர்ந்தோர் என்று கூறித் திரிபவர்கள், முதலில், தங்களை எல்லோருக்கும் சமமானவர்களாகக் கருத வேண்டும்; பிறரைத் தங்களைவிடத் தாழ்வானவர்கள் என்று கருதக்கூடாது.

இந்த மனமாற்றம் தோன்றுவதற்கு, அவர்களது நலன்கள் இந்தச் சமுதாயத்தின் ஒட்டு மொத்தமான நலன்களோடு

இலட்சம் என்றும், இந்த பொதுமக்களிடமிருந்து பங்கு மூலதனமாக ரூ 25 இலட்சம் வசூலிக்கப்படுமென்றும், மாநில சர்க்கார் ரூ 10 இலட்சம் ஏற்றுக்கொள்ளும் என்றும், மீதி 50 இலட்சத்தையும் மத்திய தொழில் நிதிக் கார்ப்பொரேஷன் ஏற்றுக்கொள்ளுமென்றும் தெரிவித்திருக்கிறார் அமைச்சர்.

இந்த 5 ஆலைகளுள் மூன்று ஆலைகளுக்கான நிர்மாண வேலைகள் எல்லாம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன என்ற தகவலையும் அவ்வமைச்சர் வெளியிட்டிருக்கிறார்.

நியமிக்கப்பட்டிருக்கிறது என்றும், மூங்கில், மர வகைகள், கரும்புச் சக்கை, புல் வகைகள் முதலியவை பற்றி அது ஆராய்ந்து முடிவு கூறும் என்றும் தெரிகிறது.

மேற்கண்ட விவரங்களை அறிவித்த அவ்வமைச்சர் மேலும் கரும்புச் சக்கையிலிருந்தும் காகிதம் தயார் செய்யலாமென்றும், மேற்கொண்டும் புதிய கரும்பாலைகள் ஏற்பட்டபின், தயாராகக்கூடிய சுமார் 37,50,000 டன் சக்கையிலிருந்து சுமார் 10 முதல் 20 இலட்சம் டன் வரை காகிதம் தயாரித்துவிடலாம் என்றும் யோசனை தெரிவித்திருக்கிறார்.

சர்க்கார் வரவு-செலவுக் கணக்குகள்

தசாம்ச நாணய முறையில் மாற்றியமைக்க ஏற்பாடுகள்

புதுடில்லி, சன 20—

புதிய நாணயங்கள் செலாவணிக்கு வருகிற நாளான இவ்வாண்டு ஏப்ரல் 1-ந் தேதியன்று, சர்க்கார் வரவு-செலவுக் கணக்குகளையெல்லாம் தசாம்ச நாணய முறைப்படி மாற்றியமைப்பதற்கான ஏற்பாடுகள் எல்லாம் துரிதமாக நடைபெற்று வருகின்றனவாம்.

சர்க்காருக்குச் செலுத்தப்படுகிற தொகைகள் சம்பந்தமாகக் கொடுக்கப்படுகிற 'செலான்'களெல்லாம் புதிய நாணய முறைப்படியே வழங்கப்படும்; இதுபோலவே சர்க்காரிடமிருந்து பணம் பெறுவதற்கான எல்லா 'பில்'களிலும் குறிப்பிடப்படும் தொகைகள் ரூபாய், 'நயா பைசா' அடிப்படையிலேயே இருக்க வேண்டுமாம்.

25 ரூபாய்களும் 5 நயா பைசாக்களும்கொண்ட ஒரு தொகை, ரூ. 25.05 (ரூ 25.5 என்று எழுதப்படக் கூடாது.) என்றும், 25 ரூபாயும், 50 நயா பைசாக்களும் கொண்ட ஒரு தொகை ரூ. 25.50 — (ரூ 25.5 என்று அல்ல) என்றும், 25 ரூபாயும் 83 - நயா பைசாக்களும் கொண்ட ஒரு தொகை ரூ. 25.83 என்றும் எழுதப்பட வேண்டுமாம்.

சர்க்காருக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகைகள் எந்த நாணயமாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படுமாம். சர்க்கார் கொடுக்க வேண்டிய தொகைகளை புதிய நாணயங்களில் மட்டுமே வழங்குவதற்கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுமாம்.

தற்போதிருந்து வருகிற நாணயங்கள், அவை திரும்பப் பெறப்படுவது வரையில் சில ஆண்டுகளுக்கு, புதிய நாணயங்களுடன் சேர்ந்தாற்போல் சட்டபூர்வமான செலாவணியில் இருந்துவரும்; என்றாலும், தற்போதுள்ள நாணயங்களை எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் திரும்பப் பெறுவதற்கான முயற்சிகளைத்தும் மேற்கொள்ளப்படுமாம்.

நயா பைசா, நயாபைசாக்களுக்கு, 'என். பி.' என்னும் சுருக்கக் குறியெழுத்துக்கள் உபயோகப்படுத்தப்படும்.

ஆரம்பத்தில் ஒரு நயா பைசா, 2 நயா பைசா, 5 நயா பைசா, 10 நயா பைசா ஆகிய நாணயங்கள் வெளியிடப்படும். பின்னர், 25 நயா பைசா, 50 நயா பைசா நாணயங்களும், புதிய ரூபாய் நாணயமும் (100 பைசாவுக்குச் சமம்) வெளியிடப்படுமாம்.

ஆரம்பக் கட்டங்களில் 10 நயா பைசாவும் அதற்குக் குறைவான மதிப்புள்ள தசாம்ச நாணயங்களும் செலாவணிக்கு விடப்படுமாதலால், 2 அணாவும் அதற்குக் குறைந்த மதிப்புள்ள நாணயங்களும் முதலில் திரும்பப்பெறப்படுமாம்.

இரண்டணாவும் அதற்குக் குறைந்த மதிப்புள்ள நாணயங்களுக்கு துல்லியமான சம மதிப்புள்ள நாணயம் நயா பைசாவில் கிடையாது; அவைகளைத் தனிப்பட்ட முறையிலோ அல்லது மற்ற நாணயங்களோடு சேர்த்தோ தசாம்ச நாணயங்களாக மாற்றும்போது, கொடுப்பவர் அல்லது வாங்குபவர் எவருக்காவது ஒரு சிறு தொகை இலாபம் அல்லது நஷ்டம் ஏற்பட நேரிடுமாம்!

ஓகோ, அப்படியா?

பம்பாய், சன 20—

டிராம்பேயில் அணுசக்தி நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள இந்தியாவின் முதல் அணு உலைக்கு 'அப்சரஸ்' என்று பண்டிதநேரு பெயர் சூட்டியுள்ளார்.

சமஸ்கிருத மொழியில் பாண்டித்தியம் பெற்றவர்கள், இந்தப் பெயரை அணு உலைக்கு வைக்க வேண்டுமென வற்புறுத்தினார்களாம்!

பயிருக்கு வளமூட்டும் பாஸ்பேட்

பெரும்பான்மையான பயிர்களுக்குப் பாஸ்பரஸ் அதிகம் தேவையில்லை ஆயினும் அது தேவையான அளவு பயிருக்குக் கிடைக்கக்கூடிய வகையிலபூமியில் இருந்தாலொழிய பயிர் விளைவு பெரிதும் குறைந்துவிடும்.

கலப்பு இரசாயன உரத்தில் சேர்ந்திருக்கும் பாஸ்போரிக் அமிலத்தில் உள்ள பாஸ்பரஸ் பயிர்களுக்கு வேண்டியதைக் காட்டிலும் பொதுவாக அதிகமாகவே இருக்கும். இவ்வாறு அதிகமாக இருந்தால்தான் பயிரின் வேர்கள் உள்ள இடத்தில் பாஸ்பரஸ் தாராளமாகக் கிடைக்கும்.

இளம் பயிர் வளர்வதற்கும் பாஸ்பரஸ் அவசியம். பயிர்களில் பாஸ்பரஸ் இல்லையானால் அவை குட்டையாக நறுக்கி வேர்கள் சரியாகப் பிடிக்காமலும், காலத்தில் முதிர்ச்சியடையாமலும் இருக்கும்

பிறகு விதை பிடிக்கும் காலத்திலும் பயிர்களுக்கு பாஸ்பரஸ் தேவை.

தக்காளிச் செடிக்கு பாஸ்பரஸ் குறைவாக இருந்தால் அதன் இலைகளின் அடிப்பாகம் பழுப்பு நிறம் பெறும்; பாஸ்பரஸ் குறையக் குறைய அப்பழுப்பு நிறம் முதலில் இலையின் நரம்பில பிடித்திருந்தது பின்னர் இலை முழுவதும் பரவும். மற்றச் செடிகளில் பாஸ்பரஸ் இல்லாத குறையைச் செடிகள் குட்டையாய் நறுக்குவதினாலும் வழக்கத்துக்கு மாறாக அதிகப் பச்சை நிறம் காட்டுவதனாலும் அறியலாம்.

பாஸ்பரஸ் குறைவாக இருக்கிறதா என்று அறிய மண் வளத்தைப் பரிசோதிக்க வேண்டும்.

பயிருக்குத் தேவையானதை அறிய இரசாயன உரங்களை வைத்துப் பார்க்கும் முறை இருக்கவே இருக்கிறது; இந்தப் பழைய முறைதான் உண்மையான நம்பத்தகுந்த முறை.

பாஸ்பரஸைப் பற்றியும் அது மண்ணிலும் பயிர்களிலும் என்ன செய்கிறது; பயிரில் அது எங்கெல்லாம் போகிறது—என்னென்ன செய்கிறது என்று உற்றுக் காண்பதற்கு இந்தப் புதிய முறை உபயோகமாகும். பாஸ்பரசுடன் அணுக் கதிரியக்கமுள்ள பொருளைக் கலந்துவிட்டு இவ்வாறு அது போகுமிடமெல்லாம் கண்டுபிடித்து விடுவார்கள்.

—'அமெரிக்கன் ரிப்போர்ட்டர்'

கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவுவதற்கு அனுமதி

தஞ்சை, சன. 20—

ஆடுதுறையில ரூ. 25,000 செலவில் தோல் பதனிடும் கூட்டுறவுச் சங்கமும், ஒரத்தநாடு தாலுகா கண்ணன்தாங்குடியில் ரூ. 10,870 செலவில் பாய்முடையும் கூட்டுறவுச் சங்கமும் நிறுவுவதற்கு தாழ்த்தப்பட்டோர் நல இலாகா டைரக்டர் அனுமதியளித்திருக்கிறாராம்.

அரியலூர் விபத்து

இந்தியப் பேரரசின் நிலை

புதுடில்லி, சன 19—

அரியலூர் இரயில் விபத்து பற்றிய விசாரணைக் குழுவின் முடிவுகளை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டுவிட்டதாம்.

திருச்சி பகுதி மின் பொறியாளர், பாதுகாப்பாளர், அரியலூர் இரயில் நிலைய அதிகாரி, இரயில் பாதையைக் கண்காணிப்போர் ஆகியோரைக் குழு கண்டித்திருக்கிறது.

தென்பகுதி இரயில்வே எஞ்சினீயரின் இலாகா மீது திட்டவட்டமாகப் பொறுப்பைச் சுமத்துவது சரியான முடிவாகாது என்றும் குழு கூறியிருக்கிறதாம்.

குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளையும் தீர ஆலோசனை செய்து, அவசியமான நடவடிக்கைகளை இந்திய சர்க்கார் மேற்கொள்ளுமாம்.

இந்திய விஞ்ஞானக் குழு பொதுத் தலைவர்

கல்கத்தா, சன. 21—

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி 1958—59-ம் ஆண்டிற்கு இந்திய விஞ்ஞானக் குழுவின் பொதுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

'கோமதியின் காதலன்'— நாடகம்

சென்னை, சன. 21—

சென்னை லாயிட்ஸ் பாங்கி ஊழியர்கள் பொழுதுபோக்குச் சங்கத்தவர் சார்பில் நேற்று முன் தினம் மாலை 6-மணியளவில் சென்னை இராசா அண்ணாமலை மண்டபத்தில், 'கோமதியின் காதலன்' நாடகம் சிறப்பான முறையில் நடைபெற்றது.

நாடகத்தில் பங்கேற்ற இராவ் பகதூர் நாகநாதன் அவர்களது நடிப்பு மிகச் சிறப்பான முறையில் அமைந்திருந்தது; உடன் நடித்த மற்றையோரும் அவரைப்போன்று நடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தால் நலமாயிருந்திருக்கும்.

நாடகத்திற்குத் தலைமை தாங்கிய ஜஸ்டிஸ் திரு இராமசாமி அவர்கள், தமது பாராட்டுரையின் போது, 'அலுவலகங்களில் பணியாற்றும் அன்பர்கள் இதுபோன்ற கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்பது பாராட்டுக்குரிய ஒன்று' எனக் குறிப்பிட்டார். கலையின் சிறப்புக் குறித்து அவர் பேசுகையில், 'எந்தத் துறையில் யார் ஈடுபடுவதானாலும் கண்ணியம், நேர்மையினின்றும் நழுவாமல் நீதியுடன் நடக்க வேண்டும்' என்றும் அறிவுரை வழங்கினார்.

நாடகத்தின் சிறந்த காட்சி அமைப்புகள், இசைக்குழுவினரின் சுவைமிக்க இசை ஆகியவை நாடகத்திற்குக் குறிப்பிடத்தக்க சிறப்புகளை அளித்தன. (ந-நி.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. க. வில்லை (பாட்ஜ்)

★

தி. மு கழகக் கொடி வட்ட வடிவில் (மேற்பாதி கருப்பு—கீழ்ப்பாதி சிவப்பு) பொறிக்கப்பட்டு, அந்த வட்டத்தைச் சுற்றி அமைந்துள்ள வெள்ளை வளையத்தில் மேலே 'தி. மு. க' என்ற எழுத்துக்களும் கீழே 'வருக! வெற்றி தருக!' என்ற சொற்றொடரும் எழுதப்பட்டு, சட்டையில் குத்திக்கொள்வதற்கு ஏற்றவகையில் வில்லை (பாட்ஜ்) தலைமை நிலையத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வில்லை சாதாரண நாட்களிலும், தேர்தல் காலத்திலும், கழகத் தோழர்களும், தேர்தல் பணியில் ஈடுபடும் தொண்டர்களும் அணிவதற்கு ஏற்றதாகும்.

வில்லையின் விலை அணா 6.

விற்பனைக் கழிவு என்று கிடையாது. வெளியூர்க்கிளைகள் 25 வில்லைகளுக்குக் குறையாமல் எத்தனை வில்லைகள் வேண்டுமோ, அவ்வளவுக்குரிய தொகையை முன்கூட்டியே தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைத்தால், தலைமை நிலையச் செலவில் அவை அனுப்பிவைக்கப்பெறும்.

'அறிவகம்' சென்னை
24—12—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

அன்பளிப்பு

★

15—1—57ல், சென்னை-குளோ பேராசிரியர் சுந்தரனார் நாடகக் கலைக் கழகச் சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாவின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு தரப்பட்டது.

* * *

1—1—57ல் அம்மன் புரம் தோழர் இராசமனுவேல்—தோழியர் ரஞ்சிதம் அம்மையார் பெண் மகவுக்குக் கிளைக் கழகத்தவரால் 'இராணி' எனப் பெயர் சூட்டப்பட்டது. இது நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு தரப்பட்டது.

* * *

இராமனுதபுரம் மாவட்டம் பரமக்குடி தோழர் ... அவர்கள் மகவுக்குப் பெயர் சூட்டு விழா நடைபெற்றது. அது நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1-ம், தி. மு கழகத் தேர்தல் நிதிக்கு ரூ. 2ம் அன்பளிப்பு தரப்பட்டது.

* * *

15—1—57 மாலை 4½ மணிக்கு, விளாப்பாக்கம் தி. மு. கழகத் தோழர் டி. எம் ஆறுமுகம் தேநீர் விடுதியில், தோழர் தி. கு நாகநாதன் தலைமையில் நடைபெற்ற பொங்கல் விழாவின்போது, அவரது ஆண் மகவுக்கு 'மனோகரன்' எனப் பெயரிடப்பட்டது. சிறுருக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. இது நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு தரப்பட்டது.

* * *

சென்னை 28-வது வட்ட தி. மு. கழகத் தோழர் கே. பி. டி. அரசு—தோழியர் மதுரம் ஆண் மகவுக்கு, தைத் திங்களன்று 'உதய சூரியன்' எனப் பெயரிடப்பட்டது இது நினைவாக நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு தரப்பட்டது.

* * *

பெங்களூர் இலக்குமணபுரி தி. மு. கழகத் தோழர் சந்திரன் அவர்களது மகவுக்கு 14-1-57-ல் நடைபெற்றப் பொங்கல்விழாக் கூட்டத்தின்போது 'எழிலரசன்' எனப் பெயர் சூட்டப்பட்டது நினைவாக நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு தரப்பட்டது.

* * *

சென்னை நுங்கம்பாக்கம்—காமராசபுரம் தோழர் இரா. ஆனந்தன் ஆண் மகவுக்கு, தோழர் வெற்றியழகன் அவர்களால் 'வீரபாண்டிய கட்டபொம்மன்' எனப் பெயரிடப்பட்டது. இது நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு தரப்பட்டது.

* * *

சென்னை 37-வது வட்டத் தோழர் சந்திரோதயம் அவர்களது பெண் மகவுக்கு 26-12-56ல் நடைபெற்றக் கூட்டத்தில் அண்ணா அவர்களால் 'தமிழரசி' எனப் பெயரிடப்பட்டது நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு தரப்பட்டது.

★

பிறப்பு

23—12—56ல் குடியாத்தம் தோழர் கே. ஆதிமூலம் அவர்களது துணைவியார் தோழியர் இராணி பெண்மகவு ஒன்றுக்குத் தாயானார். அக்குழந்தைக்கு 'செந்தாமரைச்செல்வி' எனப் பெயரிடப்பட்டது. இது நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 அன்பளிப்பு தரப்பட்டது.

* * *

21—12—56ல், வ. ஆ. மாவட்டம் வேலூர் தோழர் எம். கே. துரைசாமி துணைவியார் தேவகி அம்மையார் ஆண் மகவொன்றுக்குத் தாயானார். இது நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு தரப்பட்டது.

★

திருமணம்

கோவை மாவட்டம் முடிஸ் தோழர் கே. எம். இராசு—தோழியர் சாந்தகுமாரி திருமணம், மணமகன் இலலத்தில் நடைபெற்றது. இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பு தரப்பட்டது.

['நம் நாடு' கன்கொடைத் தொகைகளை அனைத்தும் வரப்பெற்றோம்—நன்றி.]

ஆசிரியருக்குக் கடிதம் :

தெளிவுறாத நெஞ்சம் தெளியுமா?

ஐயா,

'நல்வாழ்வு' என்ற தலைப்பில் சர்க்காரால் தயாரிக்கப்பட்ட சினிமா செய்திப் படம் தமிழ்நாட்டில் பல தியேட்டர்களில் காட்டப்படுகின்றது. மேற்குப் பாகிஸ்தானிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட அகதிகளுக்கு டில்லி சர்க்கார் ஐந்தாண்டுத் திட்டத்தில் இமயமலை அடிவாரத்திலுள்ள காடுகளை அழித்து, அழகான சுகாதார முறைப்படி வீடுகளை அமைத்துக் கொடுத்தும், உழவுக்கு வேண்டிய பல வசதிகளை அமைத்துக் கொடுத்தும் அவர்களை நல்வாழ்வுப்படுத்தியிருப்பதாகக் காண்பிக்கப்படுகிறது.

இதைப் பார்க்கும்பொழுது இலங்கையிலிருந்து குடியுரிமை மறுக்கப்பட்டுத் தமிழ்நாடு வந்தடையும் தமிழர்களைப் பற்றிய எண்ணம்தான் எழுகிறது. பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்த அகதிகளுக்கெல்லாம் நல்வாழ்வு தேடித்தர மத்திய சர்க்கார் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் நேரத்தில் நமது இலங்கைத் தமிழர் அகதிகளுக்கென இன்றுவரை மத்திய சர்க்காரோ, இம்மாநில சர்க்காரோ எதுவும் செய்யவில்லை. இதையெல்லாம் இந்த மாநில மந்திரிகள் உணருவார்களா? இதிலிருந்து வடநாடு வாழ்கிறது—தென்னாடு தேய்கிறது என்ற உண்மையை மந்திரிகள் சிந்தித்துப் பார்ப்பார்களா?

ப. நெல்லைவேந்தன்,
திருச்சி—1.

கழகத் தோழர்களின் சீரிய பொது நலப்பணி!

குப்புச்சிபாளையம், சன 17—

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த வேலூருக்கும் மோகனூருக்கும் இடையிலுள்ள குப்புச்சிபாளையம் சிறிவுச்சாலையை கழகத் தோழர்களுடைய ஒத்துழைப்புடனும், பொது மக்களின் ஆதரவுடனும் அமைப்பதென, இங்கு, கடந்த 13-ந்தேதி இரவு தோழர் பொன்னு ஆர். இரங்கசாமி எம். எல். ஏ., அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் ஒன்றில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இக்கூட்டத்திற்கு தோழர் வி. ஏ. இராமநாதன் தலைமைவகித்தார். பொது உறுப்பினர்களும், அழைப்பின் மீது 22 உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

கிளைக் கழகச் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதியாக முறையே தோழர்கள் ஏ. முத்துசாமி, ஆர். சுப்பராயன், ஆர். முத்துசாமி, இரா. பழனியப்பனும், மற்றும் 11 செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கூட்டத்தில் மற்றும் சில முக்கிய முடிவுகளும், அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. [ச. நி.]

சென்னையில் சேரிகள்!

சென்னை, சன. 21—

சென்னை மாநிலத்தில் உள்ள சேரிகள் சம்பந்தமாக திட்டங்கள்—மதிப்பீடுகள் நிர்ணயிக்க விசேட சிப்பந்திகளை நியமிப்பதற்கு நகர சபை செய்துள்ள சிபாரிசுகளை சென்னை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது; இதற்காக ரூ. 15,000 செலவிட அனுமதி அளித்துள்ளது.

தொண்டையார்புரம், மூலக்கொத்தளம், சிதம்பரம் நகர், கல்யாணபுரம், தாண்டவராயன்புரம், மீனும்பாள்—சிவராஜ்நகர் ஆகிய பகுதிகள் 1956—57-ம் ஆண்டு மத்திய அரசாங்கத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும்.

தூத்துக்குடி கம்யூனிஸ்டுகளின் பயங்கரமான அட்டூழியங்கள்

தாளமுத்துவும் அவரது தங்கையும் தாக்கப்பட்டனர்

கிளைக் கழகங்களில் புகுந்து கொள்ளையடித்தனர்

படங்களை நொறுக்கினர்; கொடிகளை அறுத்தனர்

நகர தி. மு. கழகச் செயலாளர் ஜோசப் தரும் தகவல்

தூத்துக்குடியில், அண்மையில் நடைபெற்ற சில சம்பவங்களைக் குறித்து சில பத்திரிகைகள், 'தி. மு. க—கம்யூனிஸ்டுகள் மோதல்' என்றும், 'கம்யூனிஸ்டுகளை தி. மு. க.-வினர் வெட்டினர்' என்றும் வெளியிட்டிருக்கும் செய்திகள் உண்மையானவை அல்ல என்பதை தூத்துக்குடி நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஏ. ஜோசப் அவர்கள் தரும் விவரங்கள் கூறுகின்றன. அங்கு நடைபெற்ற சம்பவங்கள் பற்றிய உண்மைகளை கீழே தந்திருக்கிறோம்:—

"சில பத்திரிகைகளில், 'தி. மு. க.—கம்யூனிஸ்டு' மோதல் என்று தலைப்பிட்டு வெளியிடப்பட்ட செய்தி வந்தது.

"கடந்த 15—1—57 பகல் 2 மணி சுமாருக்கு, நண்பர் தாளமுத்து (தி. மு. க.) கே. வி. கே. சாமி வழக்கு சம்பந்தமான சாட்சிகளைப் பார்க்கத் தனிமையில் சென்றுகொண்டிருந்த போது, சில கம்யூனிஸ்டுகள் அவரை அடித்துக் காயப்படுத்தியதுமட்டுமல்லாமல், அவரது தங்கை தோழியர் பாக்கியம் அம்மையாரையும் இன்னொரு இடத்தில் அடித்து, அவரது சங்கிலியை அறுத்துத் துன்புறுத்தியிருக்கிறார்கள்.

"இதைக் கேள்விப்பட்ட சில தோழர்கள் கூட்டமாகச் சென்று கம்யூனிஸ்டுச் சங்கம் ஒன்றைத் தாக்கியதுடன், நீதிராசன் என்ற ஒருவரைப் பல இடங்களில் வெட்டியிருக்கிறார்கள்.

ஆனால், கம்யூனிஸ்டுகள் தோழர் சிவசாமிதான் முன்னின்று அவரை வெட்டச் சொன்னதாகப் பொய்யான தகவலொன்றைப் போலீஸ் அதிகாரியிடம் கொடுத்துவிட்டனர்.

"தோழர் தாளமுத்துவும் அவரது தங்கையும் தாக்கப்பட்ட செய்தியை போலீசாரிடம் தெரியப்படுத்தி தோழர் சிவசாமி அவர்கள் போலீஸ் ஸ்டேஷனிலேயே வெகுநேரம் இருந்தார். இந்த நேரத்தில் தான் நீதிராஜன் வெட்டப்பட்டது. எனவே சிவசாமியின்மீது சுமத்தப்பட்ட பழி அபாண்டமானது என்பதை போலீஸ் அதிகாரிகளே தெரிந்துகொண்டனர்.

"அன்று நான் கோவில்பட்டி சென்றுவிட்டு, மாலை 6 மணிக்குத் தான் நகர் வந்தடைந்தேன்; வந்ததும் விவரமறிந்து போலீஸ் நிலையத்திற்குச் சென்றேன். அங்கு ஏராளமான கம்யூனிஸ்டு, தி. மு. கழகத் தோழர்களைப் போலீசார் 'வானி'ல் ஏற்றிக்கொண்டு வந்திருந்தனர். போலீஸ் அதிகாரிகள், 'எது வந்தாலும் நீங்கள் அமைதியாக இருக்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்டதற்கு, நமது தோழர்களை அமைதியாக வீட்டிற்குச் செல்லுமாறு கேட்டுக்கொண்டு நாங்களும் வீடு சேர்ந்தோம்.

"அன்றிரவு சில கம்யூனிஸ்டுகள், வடக்கூர் தி. மு. கழகத்திற்குச் சென்று படங்களையெல்லாம் உடைத்து, கொடிகளையும் அறுத்து அட்டூழியங்கள் செய்ததோடல்லாமல், மக்கள் மறுமலர்ச்சி மன்றம் சென்று அங்கும் தாக்குதல் நடத்திவிட்டு, தாளமுத்துவின் தங்கை பாக்கியம் அம்மையாரின் வீடு சென்று, பூட்டப்பட்டிருந்த அவ்வீட்டின்மேல் கற்களை வீசிக் கலாட்டா செய்திருக்கின்றனர். இந்த விவரமும் போலீசாருக்கு உடனே தெரிவிக்கப்பட்டது.

"மேலும் அன்றிரவே சுமார் 1 மணிக்கு ஏராளமான கம்யூனிஸ்டுகள் டுவிபுரம் என்ற பகுதியிலுள்ள கழக உட்கிளைக்குச் சென்று, அண்ணா, கே. வி. கே. சாமி ஆகியோரின் படங்களை நொறுக்கி, கற்களை வீசி ஓடுகளையெல்லாம் உடைத்து, கழகத்தின் முன் பக்கமுள்ள தட்டிக் கதவை அரிவாளால் வெட்டி, கழகத்தின் பெயர் பொறிக்கப்பட்டுள்ள 'போர்டை'யும் வெட்டி வெளியிலே வீசி, கழகக் கொடிகளை அறுத்து பல பகுதிகளிலும் தூக்கி எறிந்தது மட்டுமின்றி, கழகத்தின் உட்புகுந்து அங்கிருந்த 3 உண்டியல் பெட்டிகளையும் உடைத்து அதிலுள்ள பணத்தையும், மேசையைத் திறந்து அதில் வைக்கப்பட்டிருந்த 'மைக்' மற்றும் செலவு வகைக்காக வைக்கப்பட்டிருந்த ரூ. 57—6—3-யும் கொள்ளையடித்துக் கொண்டு ஓடிவிட்டனர்.

"இந்த ஈனச் செயல்களை, நகர கம்யூனிஸ்டுத் தலைவர் ஐசக், செயலாளர் முருகானந்தம், நகரசபை உறுப்பினர்கள் மாணிக்கம், சாமிதாஸ், 'தினத் தந்தி' பத்திரிகை நிருபரான சுடலை, இன்னும் சுமார் 25 கம்யூனிஸ்டுகள் சேர்ந்து செய்ததாக, அப்பகுதி வாழ் மக்கள் என்னிடம் சொல்லவே, இதனை உடனே போலீசாருக்கு எழுதி அனுப்பிவிட்டு வந்தேன்.

"இந்த அளவுக்குக் கம்யூனிஸ்டுகள் அட்டூழியங்களிலும் அதிக்கிரமச் செயல்களிலும் ஈடுபட்டு வருகிறபோதும்கூட, நாங்கள் அமைதியாகவே இருந்துவருகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்."

★

வழக்கு:

அட்டகாசங்கள் பல புரிந்து கொள்ளையடித்துத் தாக்குதல் நடத்திவரும் கம்யூனிஸ்டு தலைவர்களான முருகானந்தம், ஐசக், சுவாமிதாஸ் முதலியோர்மீது போலீசார் வழக்கு ஒன்று பதிவு செய்துள்ளனர்.

கோவா வீரர்களுக்கு விடுதலை

லிஸ்பன் சர்க்காருக்கு நல்ல புத்தி வருகிறது

லிஸ்பன், ஜன. 21—

கோவாவில் உள்ள இந்திய சத்தியாக்கிரகிகளில் சிலருக்கு மன்னிப்பு வழங்கி விடுதலைசெய்ய போர்ச்சுகல் சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

'ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு, இந்திய எல்லையைத் தாண்டி கோவாவிற்குள் புகுந்த இவர்கள் பலாத்காரச் செயல்களிலோ வேறெந்தக் குற்ற நடவடிக்கைகளிலோ ஈடுபடவில்லை என்பதாலும், இவர்கள், ஏற்கனவே தண்டனையின் ஒரு பகுதியை அனுபவித்துவிட்டார்கள் என்பதாலும் இவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படுவதாகவும் லிஸ்பன் சர்க்கார் கூறியிருக்கிறதாம்.

எத்தனைபேர் மன்னிக்கப்படுவார்கள் என்பது தெரியவில்லை.

விடுதலைத் தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர்!

வியன்னா, ஜன 21—

அல்கேரியில், மக்கள் கலகத்திற்கு மூலகாரணமாயிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின்கீழ் விசாரணை செய்யப்பட்டு இராணுவ நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட இரு விடுதலை இயக்கத் தலைவர்கள் தூக்கிலிடப்பட்டுவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

மரண தண்டனையை ரத்து செய்யுமாறும் கருணை காட்டுமாறும் அவ்விருவரும் விடுத்த வேண்டுகோளை பிரெஞ்சு அரசாங்கம் ஏற்க மறுத்துவிட்டதாம்.

அல்கேரி பத்திரிகையாளர் சங்கம், சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட்டதாகக் காரணம் காட்டி அதன் நடவடிக்கைகள் அனைத்தையும் அரசாங்கம் தடை செய்துவிட்டதாம்.

தாராவி தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம்

★

26—1—57 மாலை 6 மணிக்கு, பம்பாய்—தாராவி தி. மு. கழகக் கிளைச் சார்பில், 'திராவிடரகத்'தில் தி. மு. கழகத் தேர்தல் நிதியளிப்புக் கூட்டம் நடைபெறும். பம்பாய் மத்தியக் குழுச் செயலாளர் எஸ். தியாகராசனிடம் தேர்தல் நிதி வழங்கப்படும். இதுவரை நிதி அளிக்காத தோழர்கள், குறிப்பிட்ட தேதிக்குள் நிதி தந்து இரசீது பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஏஜெண்டுத் தோழர்களுக்கு:

சென்னை 25-1-57 (வெளியூர் 26-1-57) 'நம் நாடு' இதழில், தி. மு. கழக அபேட்சகர்களின் இரண்டாவது பட்டியல் வெளியாகிறது.

அதிகப் பிரதிகள் தேவைப்படும் ஏஜெண்டுத் தோழர்கள் உடனடியாகத் தெரிவிக்குமாறு கோரப்படுகிறார்கள்.

—பொறுப்பாளர்.

உலகப் பிரச்சினைகள்

நேரு-சிரியா அதிபர் கூட்டறிக்கை

புதுடில்லி, ஜன. 21—

காசா பகுதி உட்பட எல்லா எகிப்தியப் பகுதியிலிருந்தும் இஸ்ரேல் துருப்புகள் வாபசாகவேண்டும் என்றும், பாக்தாத் ஒப்பந்தத்தைக் கண்டித்தும், அல்ஜீரியாவில் நடைபெறும் விடுதலை இயக்கத்தை ஆதரித்தும் சிரிய மக்கள் தலைவர் குவாட்லியும் பண்டித நேருவும் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

கழகக் கூட்டம்

★

புதுவலசை:
மஜீத் திடலில்
24—1—57 மாலை 6½ மணிக்கு
தலைவர்: கே. கே. சேக்தாவூது
பேசுவோர்:
எஸ். எஸ். தென்னரசு
எஸ். ஏ. சேக்சுல்தான்
கே. கே. முத்தலிபு
திருமாறன்

திருவனந்தபுரம் உயர் நீதிமன்றப் போராட்டம் வலுக்கிறது

மக்கள் சபை உறுப்பினர் உட்பட மேலும் பலர் கைது

திருவனந்தபுரம், ஜன 21—

சுமார் 500 பேர் கொண்ட 'ஜதா' ஒன்றிற்குத் தலைமை ஏற்று திருவனந்தபுரத்தில் உயர் நீதிமன்றக் கிளை அமைக்கவேண்டும் என்று கோரி நடைபெற்றுவரும் போராட்டத்தை ஒட்டி மறியலில் ஈடுபட்ட புரட்சி சோஷலிஸ்டு கட்சித் தலைவர் ஸ்ரீகண்டன் நாயர் எம். பி.-யையும் மற்றும் 15 பேர்களையும் நேற்று போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

மற்றும் பி. சோ. கட்சி எம்.எல்.ஏ. ஒருவரும் மற்றுமோர் படைக்குத் தலைமை தாங்கிச்சென்றிருக்கிறார். அவரையும், மற்றும் 15 பேர்களையும் போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

விதிக்கப்பட்டிருக்கும் தடையுத்தரவு தினமும் மீறப்படுகிறது—உடைபடுகிறது—போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது.

மற்றும், தாலுகா அதிகாரியின் அலுவலகத்தின் முன்னும், வட்டார நீதிமன்றங்கள் முன்னும் மறியலில் ஈடுபடுவோரும் தினம் தினம் கைது செய்யப்படுகின்றனர்.

சேரிகள் ஒழிப்பு

அரசாங்கத்தைமட்டும் நம்பியிருக்கக்கூடாதாம்!

பம்பாய், ஜன. 20—

"சேரிகளை ஒழிக்க அரசாங்கத்தைமட்டும் நம்பியிருக்கக்கூடாது; மக்களின் மனப்பூர்வமான ஆதரவும் ஒத்துழைப்பும் இல்லாவிட்டால், சேரி ஒழிப்புப் போன்ற திட்டங்களை அமுல் செய்ய முடியாது" என்று பண்டித நேரு, வட பம்பாய் விழாவொன்றில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

'வீடு கட்டும் திட்டங்களை மேற்கொள்ளும் அதிகாரிகள், வீடுகளைக் கட்டுவதற்குமுன், முதலில் குடிதண்ணீர், விளக்கு, சாக்கடை போன்ற வசதிகளை ஏற்படுத்த வேண்டும்" என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

புதுடில்லி ஜன 20—

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பு மலைசாதியினருக்கும் பின்தங்கிய வகுப்பினருக்கும் உதவி மானியம் அளிக்க மத்திய அரசாங்கம் ரூ 36,50 000 அதிகப்படியாக மானியம் அளித்திருக்கிறது.

வறுமைச் சாக்கடையில் உழலும்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தேன்—'78 இலட்சம் ரூபாயை இந்தச் சர்க்கார் பாழடித்திருக்கிறது; மக்களின் வரிப்பணம் இப்படிப் பாழாவதைக் கண்டு எங்கள் மனம் குமுறுகிறது; கவனிக்கவேண்டாமா, நீங்கள்? 'ஆடிட் ரிப்போர்ட்' இது போன்ற தவிர்க்கக்கூடிய—பாழடிக்கும் செயல்களைக் கண்டித்திருப்பதை நீங்கள் பார்க்கவில்லையா?'—என்று. அதற்கு அவர், 'நீ எழுதியிருக்கும் பாஷை எனக்குப் புரியவில்லை,' என்று மமதையோடு பதில் எழுதினார். ஒரு கட்சித் தலைவர் ஊழியருக்கு எழுதும் பதிலா இது? 'இந்த ஆணவமான பதில் கிடைக்கும் வரைகூட நான், 'மக்களுக்குச் சோறு கிடைத்தால் போதும்; மாகாணத்திற்குப் பெயர் எப்படியிருந்தால் என்ன?' என்றுகூடக் கருதிய துண்டு. ஆனால், இந்த தேபரின் ஆணவமான பதிலைக் கண்ட பிறகுதான், 'தமிழ் மொழியைத் துன்புறுத்தும்—தமிழரை அவமதிக்கும் இந்த தேபர் போன்றவர்களை இங்கு ஏன் வரவிடவேண்டும்?'—என்று எனக்குத் தோன்றியது. இவர்களுக்குப் பாடம் கற்பிப்பதற்கு, 'தமிழ் நாடு' என்று நமது மாநிலத்திற்குப் பெயர் வைக்கவேண்டும் என்ற கோரிக்கையைத் தீவிரமாக்கினேன்; இன்று உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறேன்,"

என்று, திரு. சங்கு கணேசன் அவர்கள் கூறினார்.

"நாங்கள் இந்த நேரத்தில் என்ன செய்ய வேண்டும் என்று கூறுங்கள்,"

என்று, என். வி. நடராசன் அவர்கள் கேட்டபோது, 'உங்களுக்குத் தெரியாதா? வறுமைச் சாக்கடையில் உழலும் ஏழைகளுக்கு வாழ்வளிக்கத் தொடர்ந்து பாடுபடுங்கள்; அவ்வளவுதான்' என்று கூறினார், மிக உருக்கமாக!

உரையாடலின்போது ஏராளமான மக்கள் கூடியிருந்தனர்.

61 வயதான அந்தப் பெரியவர், 6 நாட்களாக வெறும் உப்பு கலந்த தண்ணீரை மட்டும் உட்கொண்டு உண்ணாவிரதம் இருந்துவருவதால் களைப்புற்றுக் காணப்படுகிறார்; நமது கழகத் தோழர்கள் சிலர் அங்கு, அவரருகில் இருக்கின்றனர்.

விடைபெற்றுக்கொண்டு வருகையில், சங்கு கணேசன் அவர்கள், 'அண்ணா அவர்களுக்கும் இதரருக்கும் என் வணக்கத்தைக் கூறுங்கள்' என்று நடராசனின் கையைப் பிடித்துக்கொண்டு வேண்டிக்கொண்ட காட்சி கண்களில் நீரை வரவழைத்தது.

"உங்கள் நோக்கங்களுக்காக நாங்கள் எங்களால் முடிந்த வரை பாடுபடுவோம்,"

என்று உறுதிமொழி தந்துவிட்டு, தோழர்கள் நடராசனும் பாண்டியனும் புறப்பட்டனர்.

இராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.